**செய்தி வெளியீடு எண்: 557** **நாள்: 20.08.2018**

## செய்தி வெளியீடு

### <u>சுதந்திரத்தினத்தன்று தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்காத நிறுவனங்கள் மீது தொழிலாளர் துறை அதிரடி நடவடிக்கை</u>

தமிழ்நாடு தேசிய பண்டிகை விடுமுறை சட்டம் – 1958ன் பிரிவு 3ன் படி தேசிய விடுமுறை தினமான சுதந்திரதினத்தன்று கடைகள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். அவ்வாறு விடுமுறை அளிக்கப்படாத பட்சத்தில் அன்றைய தினம் பணிக்கு அமர்த்தப்பட்டால் அவர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் அல்லது மாற்று விடுப்பு அனுமதித்து நமுனா VA யில் சம்மந்தப்பட்ட தொழிலாளிக்கு அறிவிப்பு அளித்து அதன் நகலினை தொழிலாளர் உதவி ஆய்வர்களுக்கு அனுப்பி விடுமுறை தினத்தன்று நிறுவனத்தில் அதனை காட்டி வைக்க வேண்டும்.

தொழிலாளர் ஆணையர் திரு. ஆர். நந்தகோபால், இ.ஆ.ப., அவர்களது அறிவுரையின் பேரில் 15.08.2018 சுதந்திரதினத்தன்று தமிழ்நாடு தேசிய பண்டிகை விடுமுறை சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) தலைமையில் கடைகள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சிறப்பாய்வின் பொழுது சென்னை மண்டலத்தில் 1,434 நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 1,074 நிறுவனங்களில் முரண்பாடுகளும், கோவை மண்டலத்தில் 946 நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 598 முரண்பாடுகளும், திருச்சி மண்டலத்தில் 996 நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 533 முரண்பாடுகளும், மதுரை மண்டலத்தில் 857 நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 533 முரண்பாடுகளும் கண்டறியப்பட்டு தமிழ்நாடு தேசிய பண்டிகை விடுமுறையை மீறிய செயலுக்காக மொத்தம் 2,738 நிறுவனங்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**